துறைமுகமே, வேலை நிறுத்தம் செய்கிற தொழிலாளர்களுக்குப் பதிலாக ஒப்பந்தத்தொழிலாளர்களை, அவர்களே கொண்டுவந்து, அந்த வேலை நிறுத்தத்தை உடைக்கிற முயற்சிகளிலே ஈடுபடக் கூடும் என்பதற்கான நிலைமை ஏற்பட்டு இருக்கிற காரணத் தாலே, இந்தப் பிரச்சனையில் ஒரு சுமுகமான தீர்வு ஏற்படு வதற்கு பேச்சுவார்த்தை நடத்தி முடிவு காணுமாறு மத்திய அரசை வலியுறுத்த, மாநில அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்தத் துறைமுக தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் பல்வேறு கட்சி சார்புடைய தொழிற் சங்கங்களும் ஈடுபட்டு இருக்கின்றன. குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தொழிற் சங்கங்கள், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையிலுள்ள தொழி லாளர்கள், அந்தோணிப் பிள்ளை அவர்களுடைய தலைமையி லுள்ள தொழிலாளர்கள், இப்படி எல்லா கட்சிகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி, அதிலே நல்ல தீர்வு காண வேண்டுமென்பதற்காக இதிலே ஈடு பட்டு இருக்கின்றார்கள். இது குறித்து மைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கின்ற வேண்டுகோளை விடுப்பது நம்முடைய கடமை, ஆனால், இதுபோன்ற நிர்வாக விஷயங்களில் மைய, மாநில அரசுகளுக்கிடையே மோதுதல் ஏற்படக் கூடாது என்ற கருத்தை நான் இன்றல்ல, தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். இருப்பினும் துறைமுகத் தொழிலாளர் களுடைய வேலை நிறுத்தத்தால் அவசியப் பொருட்களின் வினியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றது என்பதை நாம் உணர்கிறோம். தொழிலாளர்களுடைய குடும்பங்கள் மாத்திரமல்லாமல் பொது மக்களிலே பல்வேறு பிரிவினரும் இன்றைக்கு துன்பத்துக்கு ஆளாகி இருக்கின்றார்கள். கப்பல் போக்குவரத்தில் தடை ஏற்பட்டதன் காரணமாக அந்நியச் செலாவணி வசதி நிலைமையும் மோசமாகக் கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. சட்டம், ஒழுங்கு, அமைதிக்கும் குந்தகம் ஏற்படக் கூடுமோ என்கின்ற அச்சமும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. எனவே பிரதமர், மாண்புமிகு ராஜீவ்காந்தி அவர்கள் இந்தப் பிரச்சினையிலே உடனடியாகத் தலையிட்டு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்ற ஒன்றைத்தான் நான் இந்த அவையின் மூலமாக, பாதிக்கப்பட்டுள்ள தொழி லாளர்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்ள இயலும். பிரதமர் அவர்களும் விரைவிலே இதிலே தலையிட்டுத் தீர்வு காண்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

(ஆ) பால் கமிஷன் அறிக்கை தொடர்பாக புலன் விசாரணை முடிவுகள்

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இந்த அவையிலே பால் கமிஷன் அறிக்கையை வைத்து விவாதிக்கும்போது, அதன் அடிப்படையில், அதன்மீது

1989 ஏப்ரல் 21] (திரு. பி.எச். பாண்டியன்)

சி.ஐ.டி. புலன் விசாரணை செய்து, அறிக்கை தர வேண்டுமென்று மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். காலத்தில் உத்திரவிடப் பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் சி.ஐ.டி. போலீசார் புலன் விசாரணை செய்தார்களா? செய்து இருந்தால், முடித்து இருந்தால், நடத்தி இருந்தால், அறிக்கை தயாரித்து அரசாங்கத் திற்கு அளித்து இருந்தால், அந்த அறிக்கையை அரசு வெளி யிடுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்போது திடீரென்று மின்னல் போலக் கேள்விகளைக் கேட்டால் பதில் அளிக்க இயலாது. இதை ஒரு கேள்வி வடிவத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பி.எச். பாண்டியன் அவர்கள் அனுப்பி இருப்பார்களேயானால், அந்தக் கேள்விக்கான விவரங் களையும் அறிந்து விவரமாகப் பதில் சொல்ல இயலும்.

4. கவன ஈர்ப்பு.

(அ) மாநில நிலவள வங்கிப் பணியாளர்களுடைய சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படுவதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, தமிழ்நாடு முழுவதும் பணிபுரியும் நிலவள ஊழியர்கள் பெற்று வரும் ஊதியத்தில் 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மாதம் ஒன்றுக்கு தற்போது பெற்று வருகின்ற ஊதியத்தில் 150 பிடித்தம் செய்ய வேண்டுமென கூட்டுறவுப் பதிவாளர் உத்திரவு பிறப்பித்துள்ளார். 1976ஆம் ஆண்டிலிருந்து தவறான கணக்கின்படி கூடுதலாக பஞ்சப்படி வழங்கியதாகக் கூறப்பட் டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன கொடுத்து இருக்கிறீர் களோ அதை அப்படியே படிக்க வேண்டும்; விளக்கம் அல்ல: இங்கே நான்கு, ஐந்து வரிகள் தான் இருக்கின்றன.

திரு. செ. இராமலிங்கம் : 1976 ஆம் ஆண்டிலிருந்து தவறான கணக்கின்படி கூடுதலாகப் பஞ்சப்படி வழங்கியதாகக் கூறப்பட் டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன எழுதிக் கொடுத்தி ருக்கிறீர்கள் ? அது உங்கள் கையிலே இல்லையா ?

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘ மாநில நிலவள வங்கி ஊழியர்கள் பெற்று வந்த சம்பளத்தில் ரூ. 150ஐ 1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் பிடித்தம் செய்வதால் அவ்வங்கிப் பணியாளர்களிடம் ஏற்பட்டுள்ள நிலை குறித்த ’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.